www.padippakam.com

# சிந்தனைச் செய்தி

ஆய்வு இதழ்.



முத்தமிழ் வித்தகர்.

## முருகு சுப்பிரமணியம்

இதழ் எண். 19. ஆகஸ்ட். 95.

மலேசிய இதழ்களின் தொகுப்பு இதழ்

படிப்பகம்

www.padippakam.com

முத்தமிழ் வித்தகர்.

# முருகு சுப்பிரமணியம்

- காரைக்குடி அருகிலுள்ள சிறுவயல் ஊரில் பிறந்தவர்.
- தமிழகத்தில் 'பொன்னி' இதழ் மூலம் 'கவிஞர் பட்டாளத்தை' உருவாக்கியவர். பொன்னி பொங்கல் மலரை வெளியிட்டவர்.
- மலேசியாவில் தமிழ்நேசன் நாளிதழின் ஆசிரியராகப் பணி புரிந்தவர்.
- படைப்பாளிகளுக்கு 'பவுன் பரிசு' அறிமுகப்படுத்தியவர்.
- இலக்கியத் திறனாய்வுக் கூட்டங்கள் ஏற்பாடு செய்தவர்.
- பாவேந்தருடன் உடனிருந்து பழகி தமிழ் உரமேறியவர்.
- பவுன் பரிசுக் கதைகள் நூலாக்கி வெற்றி கண்டவர்.
- மலைநாட்டு மக்களின் உயர்வுக்காகச் சிந்தித்து செயல்பட்டவர்
- பலநாடுகளுக்குச் சென்று அப்பட்டறிவை தமிழாக்கியவர்.
- இதழ் நடத்தியதோடு இதழாளர்களையும் ஊக்குவித்தவர்.
- மலேசியத் தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் தலைவராக இருந்தவர்



● தமிழுக்கு உழைத்த, இவரது இழப்பு ஈடுசெய்ய முடியாதது. ●



படிப்பகம்

www.padippakam.com

# மலேசியாவில் சிறுஏடுகள்



இர. ந. வீரப்பன்
தமிழ் இலக்கியக் கழகம்,
110.JALAN BANGAU, BERKELEY GARDEN
41150 KLANG, MALAYSIA.

சிங்கப்பூரில் 1875 ல் சி.கு. மகுதூம் சாயபு வெளியிட்ட சிங்கை வர்த்தமானி என்ற முதலாவது ஏடுதான் இங்கு முதல் பத்தி -ரிகை. இவரால் சிங்கை நேசன், தங்கை நேசன், ஞான சூரியன், ஏடுகள் வெளியிடப்பட்டன. அ.மு. மரைக்காயர் என்பவர் 1887 ல் உலகநேசன்[வார ஏடு], வாகைநேசன், விஜயகேதன் மூன்று இதழ் களை வெளியிட்டார். 1883 நாகூர் வா. குலாம் காதிறு நாவலர் வித்திபா விசாரிணை ஏட்டை அவ்வாண்டு ஏப்ரலில் பதிப்பிட்டார்.

அப்பொழுது தமிழகம்-ஈழம்-மலேசியாவில் பினாங்கு,சிங்கப்பூர் நாடுகளில் வணிகத்திற்காக வந்து வாழ்ந்தத் தமிழ் முஸ்லிம்களின் நட்புறவுகளையும், தமிழீடுபாடுகளையும் இதுவளர்த்தது. இவர்களில் சிலர் தமிழறிஞராகவும், புலவர்களாகவும் இருந்தனர். கிழக்காசிய வணிகத்துறையில், அப்போது இவர்களது தொடர்பு நூற்றாண்டுக்கு மேலாகவும் இருந்துள்ளது. சிலர் இவ்வாறு தமிழும் அரபியும் கற்பித் த ார். தமிழில் வரவு செலவுக் கணக்கு எழுதின்ர்.

1933 ல் தேசநேசன் ஏட்டை அமீது களஞ்சியம் பினாங்கில் தொடங்கினார். 1942 ல் யூசுப் பாவலர் இதன் ஆசிரியராக இருந் தார். 1947 ல் சரளா பாஸ்கரன் இஸ்லாமிய ஞானச்சுடர் வெண்பா நூலைத் தந்தார். பத்து பகாட்டிலும் ஏடு ெந்துள்ளது. 1945 - 46 காலகட்டத்தில் வார ஏட்டையும் வெளியிட்டிருக்கிறார்கள். சிங்கப் -பூரில் மலாயா நண்பன் நாளேடு 1940 ல் வெளிவந்தது பெரிய சாதனை. சுதந்திரப் போராட்டத்தை இது வளர்த்தது. 1946 ல் கரீம் கனி இதன் சிறப்பாசிரியர் ஆனார். நூருல் இஸ்லாம் ஏடு 1936 லும், களஞ்சியம் 1950 லும், தூதன் அதே ஆண்டிலும், இளம்பிறை 1951 லும் வெளிவந்தன.

அறுதுகளில் அமரர் டாக்டர் இராம. சுப்பையா ' தமிழ் மலேசி -யானா ' என்ற நூலடைவைத் தொகுத்தார். தலை நகர் ஏடுகளே



படிப்பகம்

www.padippakam.com

இதில் அதிகம். 1955 ல் திருமுகம் தைப்பிங்கிலிருந்து மா. செ மாயத்தேவனால் வெளியிடப் பட்டது. கோலாலம்பூரிலும் சிறுவர் களுக்காக பூங்கா ஏட்டை மு. அப்துல் லத்தீப் வெளியிட்டார்.

1962 ல் ஈப்போவில் இலட்சியம் இதழை பாவலர் முரு.சொ. நாச்சி யப்பனும், அதற்கு முன்பு வெளியிட்டவர்களும் உண்டு. மலைமகள் உரிமை, ஒளிவிளக்கு, தமிழ்க்குயில் போன்றவைகள்ஈப்போஇதழ்கள் சுங்கை சிப்புட்டிலிருந்து தொண்டன், மலைநாடு இதழ்கள் வந்தன. தஞ்சோங் ரம்புத்தானிலிருந்தும் ஒரு நல்ல கையெழுத்தேடு வந்தது சிலிம்ரிவரிலிருந்து குங்குமம், கோலக்கிள்ளானிலிருந்து கொள்கை முரசு, தலைநகரில்ருந்து குமரி[மாசி. அண்ணாமலை], தொண்டன் [கு.ஏழுமலை] கிள்ளானிலிருந்து சுவை [நகைச்சுவைப் பித்தன்] வெளிவந்து, மலர்ந்து மாண்டன.

பினாங்கிலிருந்து அமரர் கன்னல் கவி கரீம் ஒரு காவியச்சுவை ஏட்டை நடத்தினார். இதற்கு முன்பும் இத்துறையில் கால் பதித்து வேறூன்றிய தீவு பினாங்குத தீவுதான். பிறகு நம்குரல் வெளிவந்து மடிந்தது. கோலாலம்பூரிலிருந்து தெற்கே தோன்றிய இரு இதழ் களில் ஒன்று மூவாரிலிருந்தும், மற்றொன்று சிறம்பானிலிருந்தும் [சமநீதி கி.இராமன்] நெறிமிக்கப் பாடுபட்டன. சிந்தனையாளர் இரா. இரத்தினவேலு தன்மானம், தீச்சுடர் என்ற இரு இதழ்களை விட்டு விட்டு நடத்தியதும் உண்டு.

தலைநகர் இதழ்களாக வாழ்ந்து வீழ்ந்தவை இவைகள்,

பொன்னி, காவலன், பருவம் — மூன்று சிறந்த இலக்கியப் போராட்ட இதழ்களை நடத்தியவர் பொன்னி நதி யாகராசன். அப்போது சுங்கைவே, சுக்கர்னோ முனியாண்டி கனகம் இதழை வெளியிட்டார், இதற்கு முன்னும் முத்தமிழ் இதழை சிறுகதை - பாடலுக்காக பாவலர் இராகவன் பிள்ளை நடத்தினார். கதிரவன், கலாச்சாரம் இதழ்களை நடத்தியவர் இர.இராமசாமி. அமரர் முருகு சுப்பிரமணியன் நடத்திய ஏடான புதிய சமுதாயம் நாடெங்கும் பரவிய பின் வீழ்ந்தது. தமிழ்மணியின் தூதனும், நா.ஆ.செங்குட் -டுவனின் முல்லையும், பொன்னுத்துரையின் மல்லிகையும், எம். குமாரனின் கோமாளி, குடும்பமும் நின்றன. தமிழ்மலர், வெளிச்சம் இலக்கியம், மக்கள் குரல், ம.இ.கா.மாத ஏடு யாவும் மறைந்த வடு தமிழ் வரலாற்றின் கரைபடாத சுவடுகள். தமிழ்நெறி, தமிழியம் இதழ்கள் தொடரலாம். இன்னும் பல இதழ்கள் நினைவிலுமில்லை. கைவசமுமில்லை. நிழல் போன்ற காட்சிகள் தமிழின் மாட்சியாகும்.

இருபதாண்டாக வெளிவரும் ஒரே சிறுவர்இதழான திருமகளை வெளியிடுபவர் கி.வேலுசுவாமி அவர்கள். இன்றுவரை நாளேடாகத் தொடரும் தமிழ்நேசன் 1925ல் கோலாலம்பூரில் தொடங்கப்பட்டது

உதவி: 8 வது தமிழாராய்ச்சி/ 5 வது தமிழ்க் கல்வி வளர்ச்சி/ தமிழ் இலக்கியக் கழக வெள்ளி விழா மலர்கள்[1995]



படிப்பகம்

www.padippakam.com

# மலேசிய இதழ்கள்

— பொள்ளாச்சி நசன் —

'திரைகடலோடியும் திரவியம்தேடு' என்பதற்கிணங்க வாணிபம் செய்வதற்காகப் பல நூற்றாண்டுகளுக்கு முன்பாகவே பயணம் செய்த தமிழர்கள் பூமிப்பந்தின் பெரும்பாலான நாடுகளுக்குச் சென்று, அங்கு தங்கி, பொருளாதாரத்தில் மேலோங்கி வளர்ந்தனர்.

நாடுபிடிக்கும் போராட்டத்தில் தன்னை ஈடுபடுத்திக் கொண்ட ஆங்கில அரசு மலேசியாவிலும் தனது ஆட்சியை விரிவுபடுத்தியது. அங்கு இரயில் பாதை போட, காடு திருத்தி நாடாக்கக் 'கடின உழைப்பிற்குச் சொந்தக்காரரான' தமிழர்களைக் கங்காணிகள் மூலம் 'ஒப்பந்தக் கூலிகளாக' அழைத்து வந்தது. ஆசைகாட்டி அழைத்து வரப்பட்ட அவர்கள் அரசு அதிகாரங்களுக்கிடையிலும், கங்காணிகளுக்கிடையிலும் பட்ட இன்னல்கள் கொஞ்ச நஞ்சமல்ல. மாற்றுக் கலாச்சார/ மொழி/ இன/ இயற்கைச் சூழல்களுக்கிடையில் அவர்களது 'சுயம்' சிதைக்கப் பட்டது. இருந்தாலும்.........

ஏகப்பட்ட துயரங்களுக்கிடையிலும் 'பாறைகளுக்கிடையில் துளிர்த்த இளம்துளிராக' அவர்களிடையே கலை இலக்கியஉணர்வு துளிர்த்தது. பாட்டு, கூத்து என நாட்டுப்புறக் கலைகளாகவும் — கதை, கவிதை, கட்டுரை எனவும் வளர்ந்தது. மலேசியாவில் தமிழ் மொழியை ஆட்சிமொழியாக்கப் பாடுபட்டவரும், பல்கலைக் கழகத்தில் தமிழ் வளர்ச்சிக்காக நிதி திரட்டி அளித்தவருமான தமிழவேள் கோ. சாரங்கபாணி/ இதழ் நடத்தி வெற்றி கண்ட டத்தோ. ஆதி நாகப்பன், அ.மு.சு. பெரியசாமி, பொன்னித்துறைவன்/ இலக்கிய வித்தகரான மா. இராமைய்யா/ தமிழ்நேசன் இதழ் மூலம் பவுன்பரிசு அறிமுகப்படுத்திய முருகு. சுப்பிரமணியன்/ தமிழ்மலர் நாளிதழை நிறுவிய ஆறுமுகம்பிள்ளை/ சிதம்பரம் தமிழ்ப் பாடசாலையை நிறுவிய டத்தோ. கரு. சிதம்பரம்பிள்ளை/ கதைவகுப்பு நடத்திய கந்தசாமி வாத்தியார் போன்றவர்களும் — மேலும் இதழ்நடத்தியும், இலக்கியப் படைப்பாக்கங்கள் ஆக்கியும் வந்த/வருகிற பலரும் மலே -சியத் தமிழ்வளர்ச்சிக்குப் பாடுபட்டுள்ளார்கள்/ பாடுபடுகிறார்கள்.



படிப்பகம்

www.padippakam.com

மலேசியாவில் பினாங்கு, மலாக்கா, சிங்கப்பூர் போன்ற நகரங்களிலும், கோலாலம்பூர், மெத்தகாப், கிள்ளான், கம்பார், ஈப்போ, சிறம்பான், சிங்கை சிப்புட், காகான், பட்டர்வோர்த், ஜோகூர், பெட்டாலிங் ஜெயா, பேராக், மெர்சிங் — போன்ற ஊர்களிலும் தமிழ் இதழ்கள் நடத்தப்பட்டன.

மலேசியாவில் வெளியான / வெளியாகும் தமிழ்ச் சஞ்சிகைகள் பற்றிய செய்திகளைத் தொகுக்க ஊக்கப்படுத்திய இர. ந. வீரப்பன் அவர்களுக்குச் சி,செ., நன்றிக்கடன் பட்டுள்ளது. இது ஒரு முடிவு அல்ல; தொடக்கம் மட்டுமே. விடுபட்ட இதழ்களை/செய்திகளை இணைத்து முழுமையாக்க ஆர்வலர்கள் முயற்சி செய்யவும்.

○ 1875 மலேசியாவில் முதன்முதலாகத் தமிழ் இதழ்களைத் திரு. சி.கு. மகுதூம் சாயபு தொடங்கினார். 1875 ல் சிங்கை வர்த்தமானி பின் சிங்கைநேசன், ஞானசூரியன் ஏடுகளை நடத்தியுள்ளார்.

○ 1878 மு.மு. சையதுபின் முகைதீன் பினாங்கிலிருந்து தங்கை நேசன் என்ற திங்களிருமுறை ஏட்டை நடத்தியுள்ளார்.- 150 படிகள்

○ 1883 விஜயகேதன் - மாதஇதழ் - பினாங்கு.


சிங்கைநேசன்.

Singai Nesan.

DEDICATION.

[1887 ல் வெளியான சிங்கை நேசன் முதல்இதழின் முதல் பக்கம்]

○ 1887 ஜூன் 27 ல், 1. முகமது அலி சந்து சிங்கப்பூரிலிருந்து திங்கட்கிழமைகளில் வெளியான வார இதழ். 1890 வரை 3 ஆண்டுகள் நடைபெற்றுள்ளது. விக்டோரியா பேரரசி முடிசூட்டு வெள்ளி



படிப்பகம்

www.padippakam.com

விழா நினைவாகத் தொடங்கப்பட்டது. இவ்விதழ் தமிழர் நலனில் அக்கறை காட்டியது. தமிழ்ப்பிள்ளைகள் படிக்கத் 'தமிழ்ப்பள்ளி' வேண்டும் என்று போராடியது. முதல்இதழிலேயே ''நம் குழந்தைகள் தாய்மொழியில் கல்வி கற்பதற்குப் பள்ளிக்கூடம் இல்லாதது பெருங் குறை. இத்துறையில் நாமே கடமை தவறியவர்களாக இருந்து வருகி -றோம்'' — என்று தலையங்கத்தில் வலியுறுத்தியுள்ளது. 2 வது இதழில் தமிழர்களின் ஒற்றுமையை வற்புறுத்தியுள்ளார் ஆசிரியர். அச்சாக்கம்: தீனோதயயந்திர சாலை; விற்பனை: 150 படிகள். இவ் விதழின் முழுத்தொகுபும் சிங்கப்பூர் இராபில் நூலகத்தில் உள்ளன.

○ 1887 உலகநேசன் - வாரஇதழ் - பினாங்கு - ஆர்.கே.ராதா.

○ 1887 ஞானசூரியன், பினாங்கு; ஆசிரியர்:சி.கு.மகதும்சாயபு, இதழை சிங்கை நேசன் கல்வி வளர்ச்சிக் கழகம் நடத்தியது. இது சிங்கப்பூரில் ஒரு ஞானசூரியன் வந்து நின்றதாகக் குறிப்பிட்டுள்ளது

○ 1887 ல் சீர்திருத்தம், முன்னேற்றம், தமிழன், ஜோதி என்ற இதழ்களும் வெளியாகியுள்ளன.

○ 1888 இந்துநேசன் - மாதஇருமுறை இதழ் - பினாங்கு.

○ 1888 பினாங்கு விஜயகேதனன், நாளிதழ், பினாங்கு. ஆசிரியர் குலாம் காதிறு நாவலர். இதழ் ஓராண்டுக்காலம் நடைபெற்றது.

○ 1896 — 97. தேஜோபிமானி, மாதஇருமுறை இதழ். பேராக்கி -லிருந்து அம்பலவாணப்பிள்ளையை ஆசிரியராகக்கொண்டு வந்தது

○ 1897 பினாங்கு வர்த்தமானி - பினாங்கு - அரசியலிதழ்.

○ 1902 யதார்த்த பாஸ்கரன், பினாங்கு, வி. எம். சுவாமியை ஆசிரியராகக் கொண்டு வெளியான அரசியல் இதழ்.

○ 1905 றபீக்குல் இஸ்லாம், சிங்கப்பூர், தளவாய். ம. சின்ன வாப்பா மரைக்காயர் நடத்திய முஸ்லீம் இதழ்.

○ 1906 வித்யாவிசாரினி, குலாம் காதிறு நாவலர், பினாங்கில் வெளியான வார இதழ்.

○ 1912 பினாங்கு ஞானாசிரியன், நாளிதழ், பினாங்கு, ஆசிரியர் கே. கே. சம்சுகனி. இவ்விதழின் முகப்பில் 10 டிக்கெட் ஒப்பம் வாங்கி அனுப்புகிறவர்களுக்கு ஒரு இதழ் இலவசம் என அறிவிக்கப்பட்டது

○ 1915 மகாயுத்த சமாசார பத்திரிகை - வார - கோலாலம்பூர்.

○ 1916 சைபுல் இஸ்லாம், கோலாலம்பூர், மௌலவி அகமத் சையத் அவர்களை ஆசிரியராகக் கொண்ட இஸ்லாமிய இதழ்,



படிப்பகம்

www.padippakam.com

○ 1924 செப்டம்பர் 10 ஆம்நாள் 'தமிழ்நேசன்' வாரஇதழ் சி. நரசிம்ம ஐயங்காரால் தமிழ்த் தோட்டத் தொழிலாளர்களின் குரலாகத் தொடங்கப்பட்டது. 20-2-37 ல் இவ்விதழ் நாளேடாக மாறியது. இரண்டாவது உலகப்போரின்போது ஜப்பானால் மலேயா பிடிக்கப்பட்டபோது எல்லா இதழ்களும் நிறுத்தப்பட்டன. ஆனால் இவ்விதழ் மட்டும் 1942 ஜனவரி 20 வரை நிற்காமல் நடைபெற்று வந்தது. பின்னர் நேதாஜி சுபாஸ் சந்திரபோஸ் தலைமையில் இயங்கிய இந்திய சுதந்திரச்சங்க ஆதரவில் நடத்தப்பட்டது. இவ்விதழ் இலக்கியம், தத்துவம், மாதர் பகுதி, சிறுவர் பகுதி, விஞ்ஞானம் மருத்துவம் போன்ற பலதுறைகளிலும் கட்டுரைகளை வெளியிட்டது 1950 ல் கந்தசாமி வாத்தியார் இதில் 'கதைவகுப்பு' தொடங்கினார் இது எழுத்தாளர்களுக்குப் பயிற்சிப் பட்டறையாக இருந்தது. முருகு சுப்பிரமணியன் ஆசிரியர் பொறுப்பேற்றதும் சிறுகதைக்கு பத்து வெள்ளி, கவிதைக்கு ஐந்து வெள்ளி எனப்பரிசு அறிமுகப்படுத்தப் பட்டு அது, பின்னர் ''பவுன் பரிசுத்'' திட்டமாக விரிவடைந்தது. பரிசளிக்கப்பட்ட கதைகள் பவுன் பரிசுத் தொகுப்புகளாக வெளி வந்தன. வாரஇதழாக இருந்தபோது 1,200 படிகளே விற்பனையாகின. நாளிதழானபோது 25,000 படிகளுக்கு மேலும் விற்பனை யானது. ஞாயிறு பதிப்புகள் தரமானவைகளாக இருந்தன.

சி.நரசிம்ம ஐயங்காருக்குப் பிறகு அவரது துணைவி லட்சுமி அம்மாள், பிறகு பார்த்தசாரதி, ஆதிநாகப்பன், ரா். வேங்கடராஜலு கு.அழகிரிசாமி, கே.சி. அருண், முருகு. சுப்பிரமணியன் என இவ்விதழ் ஆசிரியர்களின் பட்டியல் தொடர்ந்தது. தற்பொழுது இது டத்தோ சாமுவேல் குடும்பத்தினரால் ஏற்று நடத்தப்பட்டு வருகிறது

○ 1924 சிந்தாமணி. வி.பாலம்மாள், கோலாலம்பூரிலிருந்து பெண்கள் பொறுப்பேற்று நடத்திய மகளிருக்கான இதழ்.

○ 1927 நவநீதம், வாரஇதழ், சிங்கப்பூர், ஆ-ர்: எம் எம். புகாரி

○ 1929 கலியுக நண்பன்.

○ 1929 இந்திய மித்திரன், ஆசிரியர்: பி. வேணுகோபால்.

○ 1930 மலாய்நாடு, வார இதழ்.

○ 1930 தினவர்த்தமானி, நாளிதழ், சிங்கப்பூர்.

○ 1931 நவனீதம் இதழ்.

○ 1931 முன்னேற்றம். வாரஇதழ். தமிழவேள் கோ.சாரங்கபாணி அவர்களால் பெரியாரின் கருத்துக்களை உள்ளடக்கியதாக நடத்தப் பட்டது. தன்மான இயக்கப் பிரச்சார ஏடாகத் தொடர்ந்தது.


படிப்பகம்

www.padippakam.com

○ 1932 மலாயா மித்திரன், கோலாலம்பூர். ஏ. என். ஹமீது அவர்களால் நடத்தப்பட்ட முஸ்லீம் இதழ்.

○ 1933 தேசநேசன், வாரஇதழ், பினாங்கு, ஹமீது களஞ்சியம்.

○ 1933 தமிழன், நாளிதழ், பினாங்கு. ஆசிரியர்: அற்புதானந்தா.

○ 1934 ஜனவர்த்தமானி, வாரஇதழ், பினாங்கு. எம். எஸ். மாணியம் அவர்களால் வெளியிடப் பட்டது.

○ 1935 ஜூலை 6 ல் தமிழவேள் கோ. சாரங்கபாணி நாயுடு அவர்களால் 'தமிழ் முரசு' வார இதழாகச் சிங்கப்பூரில் தொடங்கப் பட்டது. இதழின் விலை ஒருகாசு. இதழ் சிங்கப்பூர் தமிழ்ச்சீர்திருத் -தச் சங்க சார்பில் வெளியாகியது. பின்னர் வாரம் மும்முறையாக -வும், பிறகு நாளிதழாகவும் மாற்றப்பட்டு தொடர்ந்து வெளியாகிறது வை. திருநாவுக்கரசு ஆசிரியராக இருந்தபோது சிறுகதை, கவிதை களுக்கான போட்டி வைத்து, வைரத்தோடு மற்றும் பவுன் பரிசளிக் -கப்பட்டது. இதன் ஞாயிறு பதிப்புகள் தரம் மிக்கவை.

○ 1935 சமுதாய ஊழியன். ஆசிரியர்: இராமநாதன். லிங்கம் மொழிபெயர்ப்பாளர். இது தொழிலாளர்கள் பிரச்சனையை எழுதியது கோலாலம்பூரிலிருந்து வெளியான வார இதழ்.

○ 1935 சீர்திருத்தம் மாத இதழ்.

○ 1936 தமிழரசி, கோலாலம்பூர். மகளிர் நடத்திய மகளிர்இதழ்

○ 1937 கிரக லட்சுமி, கோலாலம்பூர், எஸ்.கிருஷ்ணன் நடத்திய மகளிர் பிரச்சனைகளை முதன்மைப் படுத்திய இதழ்.

○ 1937 மலேயாமித்திரன், நாளிதழ், சிங்கப்பூர். வ.க. ஆனந்தம்.

○ 1937 தொழிலாளி, வாரஇதழ், கோலாலம்பூர், ரெ.சீனிவாசன்.

○ 1937 தேசாபிமானி, வாரஇதழ், பினாங்கு, எம்.ஜெகதாசன்.

○ 1937 தேஜோபிமானி, நாளிதழ், பேராக், எஸ். அம்பலவாண பிள்ளை. 1896 களில் மாத இருமுறை இதழாக வந்துள்ளது.

○ 1937 நவயுகன், கீவாளுர். எம்.எம்.புகாரி நடத்திய அரசியல் இதழ். மாத இதழாக வெளியாகியுள்ளது.

○ 1938 தமிழ் விவசாய சஞ்சிகை. கோலாலம்பூரிலிருந்து அரசு விவசாயத் துறை சார்பாக வெளியான அரையாண்டு இதழ்.

○ 1939 தமிழ்க்கொடி. மாத இதழ்.



படிப்பகம்

www.padippakam.com

○ 1940 ஜனநாயகம். சிலாங்கூர். பொறுப்பு: அந்தோனிசாமி.
○ 1941 மலேயா நண்பன், நாளிதழ், சிங்கப்பூர். அற்புதானந்தா
○ 1941 ஜெயமணி, வாரஇதழ். கா. சுப்பிரமணியம்.
○ 1942 யுவபாரதம், வார இதழ்.
○ 1942 சிரம்பான் செய்தி. வார இதழ்.
○ 1942 சேவிகா. வார இதழ்.
○ 1942 இஸ்லாமிய இளைஞன், கோலாலம்பூர், இஸ்லாமியஇதழ்
○ 1942 சுதந்திர இந்தியா. நாளிதழ்.

○ 1943 ஜெய்ஹிந்த். இந்திய சுதந்திரக்கழகத்தின் கிழமை ஏடு. ஆசிரியர்: ஆதி. நாகப்பன். இவர் பினாங்கு நகரில் நடந்த சேவிகா நாளிதழுக்குக் கூட்டாசிரியராகவும், அதன் பின் ஜெய்ஹிந்த் எனும் தமது சொந்த வார இதழுக்கு ஆசிரியராகவும் இருந்துள்ளார்.

○ 1943 உரிமை, வார இருமுறை இதழ். ஈப்போ, எம்.மணியம்.
○ 1943 புது உலகம், வார இதழ்.

○ 1943 சிறம்பான் கெஜட், வார இதழ். இராம. சின்னைய்யா அவர்களால் சிறம்பானிலிருந்து வெளியிடப் பட்டது.

○ 1946 நவயுகம். மாத இதழ்.
○ 1946 மலேயா வர்த்தமானி, வாரஇதழ், எஸ். பிச்சைபிள்ளை.
○ 1946 சக்தி, வாரஇதழ், பினாங்கு, ஆ-ர்: கே. இராதா.
○ 1946 ஜனநாயகம், நாளிதழ்.
○ 1946 பாட்டாளி முரசு. சிங்கப்பூர். ஆ-ர். வீரசேனன்.

○ 1947 சிறம்பான் செய்தி, வார இதழ். சிறம்பான். ஆசிரியர்: இராம. சின்னய்யா.

○ 1947 மங்கை, கி,சாவித்திரி அம்மாள், மகளிர் இதழ்.
○ 1947 புதுமைப் பெண், குகப்ரியை, மகளிர் இதழ்.
○ 1948 குங்குமம், எஸ். விசாலாட்சி, மகளிர் இதழ்.
○ 1948 தமிழ்ச்சுடர், மாத இதழ்.
○ 1948 ஜனோபகாரி, வார இதழ்.

○ 1948 செந்தமிழ்ச் செல்வி, வார இருமுறை இதழ், பினாங்கு, எஸ்.முத்துசாமி நடத்திய இலக்கிய இதழ்.

○ 1948 தேசநேசன், நாளிதழ், பினாங்கு.

○ 1949 இனமணி, வார இதழ், ஈப்போ. த.வ.மு.மகாலிங்கம் நடத்திய பகுத்தறிவு இயக்கக் கொள்கை விளக்க இதழ், 2ஆண்டு -கள் தமிழ் உரிமைக்கும், தமிழர் நலத்திற்கும் பாடுபட்டது.



படிப்பகம்

www.padippakam.com

○ 1951 சமத்துவன், வார இதழ், கோலாலம்பூர், சின்னத்தம்பி.

○ 1952 சங்கமணி, வாரஇதழ், தோட்டத் தொழிலாளர்களின் பிரச்னைகளை முன்னெடுத்துச் சென்றது. முதலில் ஆதி. நாகப்பன் தொடர்ந்து தி.சு.சண்முகம். கவிஞர். சங்கு சண்முகம் பொறுப்பாசி-ரியர்களாக இருந்துள்ளார்கள். சங்க செய்திகளை எழுதியது.

○ 1952 சோலை. ஜனவரியில் கா.இராமநாதன் அவர்களை ஆசிரியராகக் கொண்டு எட்டுத் திங்கள் நடைபெற்றுள்ளது.

○ 1954 தேசபக்தன், நாளிதழ், பினாங்கு. ஆ-ர். கே.இராதா,

○ 1954 புதுயுகம் வாரஇதழ், சி.ஆர். நரசிம்மராஜ் அவர்களை ஆசிரியராகக் கொண்டு சில திங்களே நடைபெற்றுள்ளது.

○ 1955 தேசபந்து, நாளிதழ், பினாங்கு, எஸ்.கன்னையன்.

○ 1955 திருமுகம் அக்டோபர் முதல் கையெழுத்தாக மாதஇதழ் பிறந அச்சு இதழானது அச்சு இதழில் தைப்பிங் பற்றி பெரி. முத்தையா எழுதினார். ஆசிரியர்: மா. செ. மாயத்தேவன்.

○ 1955 சிந்தனை மாதஇதழ்.

○ மாணவர் பூங்கா. மே மாதம் கையெழுத்துப் படியாகத் தொடங்-கப் பட்டது, பிறகு அச்சுப்படியாகியது. ஆசிரியர். மு. அப்துல் லத்தீப். இதழ் நின்றதும் 1976 ல் தமிழ்மலரின் நிர்வாக ஆசிரியர்.

○● தமிழ் முரசு மாணவர் மணிமன்ற மலர். கோ. சாரங்கபாணி அவர்களால் மாணவர்களுக்காக நடத்தப்பட்ட இலவச இதழ்.

○ 1957 மலாயா, பக்கீர் முகமது, இஸ்லாமிய இதழ்.

○ 1957 எழுச்சி, வாரஇதழ், பினாங்கு. வி.கே.சுப்பிரமணியம்.

○ 1957 தேசாபிமானி, எம்,எம்.பி.முஹிதீன், இஸ்லாமிய இதழ்.

○ 1957 முஸ்லீம் மஞ்சரி. ஏ.எல்.எம்.கியாஸ், மலாயா.

○ 1958 மலைமகள். அக்டோபரில் தொடங்கி 4 ஆண்டுகள் தொடர்ந்தது. அ.மு.சு.பெரியசாமி புரவலராகவும், ஜி.சி.இளங்கோ பொறுப்பாசிரியராகவும் இருந்த தரமான கலைஇலக்கிய,திங்களிதழ்

○ 1958 தமிழ்ஒளி, கோலாலம்பூர்.

○ அரசியல் மணி, சுங்கை பாரு.

○ ஆத்ம நண்பன், தைப்பிங்.

○ மக்கள் தொண்டன், பட்டர்வொர்த்.

○ மனஓசை, கோலாலம்பூர்.

○ மலைநாடு, சுங்கை சிப்புட்.

○ நவரசம், மாதஇதழ், கோலாலம்பூர்.



படிப்பகம்

www.padippakam.com

○ 1958 பாரதி, பினாங்கு.
○ ,, தமிழ்ஒளி, அலார் ஸ்டார்.
○ ,, தமிழ்த்தாய், பட்டர் வொர்த்.
○ ,, தமிழ்த் தொண்டன், கோலாலம்பூர்.
○ 1959 ஆசிரியர் தீபம், கோசிலாங்கூர், ஆ-ர், பொன். சோம சுந்தரம், ஆசிரியர்கள் பற்றிய அறிக்கை ஏடு. சில திங்களே நடை பெற்றுள்ளது. மாத இதழ்.
○ 1959 மாதவி. ஏப்ரலில் ஐ.உலகநாதன் தொடங்கிய மாதஇதழ் கவிதைகளுக்கு முதலிடம் கொடுத்தது. அறுசீர் விருத்தப் போட்டி நடத்தியது. புதிய கவிஞர்களை அறிமுகப்படுத்தியது,
○ 1959 நறுமணம், ஹாஜி.பி. ஷவ்கத் அலி, கவிஞர் பட்டர் வொர்த் ஜைனுதீன் துணையுடன் இத் திங்களிருமுறை ஏடு நடந்தது
○ 1959 முன்னேற்றம், சிங்கப்பூர், ஆ-ர். வே.சி,நாராயணசாமி.
○ 1959 அறுசுவை, கையெழுத்துப்பிரதி, மெந்தகாப்.
○ 1959 பாரதி, கையெழுத்துப் பிரதி, பினாங்கு.
○ 1959 காவலன், கிள்ளான். ○ வளர்ச்சி, கோலாலம்பூர்.
○ 1960 அறிவு நூல் முடிவு, அரையாண்டு இதழ். சிங்கப்பூர். சா.மு.ரத்தினம் அவர்களால் வெளியிடப்பட்டது.
○ 1960 செம்பிறை, வார இருமுறை இதழ். சிங்கப்பூரிலிருந்து வி. எஸ். இஸ்மாயில் ஜின்னா அவர்களால் வெளியிடப்பட்டது.
○ 1960 ஜோதி, நாளிதழ், பினாங்கு. ஆ-ர்:லட்சுமணசாமி.
○ 1960 எதிரொலி, கோலாலம்பூர்.
○ ,, முத்தமிழ், ,,
○ ,, நவ மலாயா ,,
○ ,, சிலம்பு ,,
○ ,, மக்கள் மன்றம், பட்டர் வொர்த்.
○ ,, மக்கள் முரசு, குளுவாங்.
○ ,, மலை மோகினி, பெட்டாலிங் ஜெயா.
○ ,, நண்பன், பினாங்கு.
○ ,, பாவை, ,,
○ ,, செந்தமிழ். ,,
○ ,, அரும்பு. ,, — கையெழுத்துப் பிரதி இதழ்.
○ 1961 இலட்சியம். ஈப்போவிலிருந்து வெளியான இதழ்.
○ 1962 தேச தூதன், நாளிதழ்.
○ ,, பாசமலர், ஜோகூர் பாரு.
○ ,, தமிழ்மணி, பினாங்கு.
○ ,, வெற்றி, கோலாலம்பூர். தகவல் இலாக்கா வெளியிடு.


படிப்பகம்

www.padippakam.com

○ 1963 தமிழ்மலர், நாளிதழ். சிங்கப்பூர், வாரம் தோறும் முத்திரைக் கதைக்கு பத்து வெள்ளி அன்பளிப்புக் கொடுத்தது, தற்பொழுதும் வெளியாகிக் கொண்டிருக்கிற நாளிதழ் இது.

○ 1963 அன்னை, வார இருமுறை ஏடு. ஆ-ர்: ஏழுமலை.

○ ,, அன்னை, கோலாலம்பூர்.

○ ,, முத்தமிழ், ,,

○ ,, தாமரை, ,,

○ ,, செங்கதிர், ,, வாரஇதழ். ஆர்.ரத்னவேலு.

○ ,, அருவி, தைப்பிங்.

○ ,, குமரி, பெட்டாலிங் ஜெயா.

○ ,, சங்க முழக்கம், கிள்ளான்.

○ ,, தமிழ்ப்பூங்கா, பத்து அன்னம், கையெழுத்துப் பிரதி.

○ ,. கூட்டுறவு, கோலாலம்பூர். தேசிய நலநிதிக் கூட்டுறவு சங்க மாத இதழ். ஆசிரியர். கே,ஆர்.சோமசுந்தரம். தோட்டப்பிரச் சனைகளுக்கான படைப்புகளை வெளியிட்டு;தற்பொழுதும்வருகிறது

○ 1964 நேர்மைக் குரல், ம.இ.கா. வின் கொள்கைகளைப் பரப்புவதற்காக ச. சாமிவேலு துவக்கினார். அது மூன்று திங்களில் இடையடி பட்டுவிட்டது.

○ 1964 மயைரசு, வார இருமுறை இதழ், செல்லையா. ரத்தினம்.

○ ,, தேசபக்தன், வாரஇதழ், பினாங்கு, டி.எஸ்.கனகசுந்தரம்

○ 1964 நேசன் சிறுவர் அரங்கம், பிப்ரவரி 5 முதல் மாணவர் மணிமன்ற இதழைப் போலவே சிறுவர்களுக்கான இதழ் இது.

○ 1964 காவலன், கிள்ளான், அரசியல் ஏடு. ந.தியாகராசன்.

○ ,, தீச்சுடர், கோலாலம்பூர்.

○ ,, உரிமை, ஈப்போ.

○ 1965 பொன்னி. ஏப்ரல் 29 ல் முதல்இதழ் வெளியானது. இது பாவேந்தர் நினைவு மலராக மலர்ந்தது. பொன்னித் துறைவன் அவர்களை [ந.தியாகராசன்]— ஆசிரியராகக் கொண்ட இவ்விதழ் பழைய / புதிய எழுத்தாளர்களை இணைத்துக் கொண்டு தரமான இலக்கியப் படைப்புகளை வெளியிட்டு வந்தது.

○ 1965 தொண்டன், வார இருமுறை இதழ். கே.ஒய்.அமரன்.

○ ,, மாணவர் உலகம், கோலாலம்பூர், ஆசிரியர் : ஜானகி வெங்கடேசன், மகளிர் நடத்திய மகளிர் இதழ்.

○ 1965 கண்ணோட்டம், சிங்கப்பூர் கலாச்சார அமைச்சகம் நடத்திய வார இதழ்.

○ 1965 தேனருவி, சிரம்பான்.

○ ,, தேனீ, கோலாலம்பூர்.



படிப்பகம்

www.padippakam.com

○ 1966 உரிமை, வார இருமுறை இதழ், சிங்கப்பூர், சா.கா.சாமி.
○ ,, ஜொபேரிகை, குவாந்தான்,
○ ,, ஜெய மலேசியா, கோலாலம்பூர்.
○ ,, திரை நிலா, ,,
○ 1967 வானொலி, வார இருமுறை இதழ், சிங்கப்பூர், ஆசிரியர் இரா. சிவபெருமாள்.
○ 1967 தமிழ்க்குயில், கா.கலியபெருமாள் நடத்திய திங்களிதழ்
○ ,, மலைநாடு, சுங்கை சிப்புட். வீ. மீனாட்சி சுந்தரம் ஐந்து ஆண்டுகள் நடத்திய கலை, இலக்கிய அரசியல் இதழ்.
○ 1967 பாவை, பினாங்கு.
○ 1967 தன்மானம். கோலாலம்பூர்.
○ 1969 முத்தமிழ், மாதஇதழ், டி.வி.ராகவன். 1973 வரை தொடர்ந்த தரமான இலக்கிய இதழ்.
○ 1969 கொள்கை முரசு, 5 ஆண்டுகள் நடந்தது. ஆசிரியர் கே, ஆர். ராமசாமி உன்னைத்தான் தம்பி என்ற சீர்திருத்தச் சிந்தனைக் கட்டுரைகளை எழுதியுள்ளார்.
○ 1971 கலாச்சாரம், கோலாலம்பூர்.
○ 1972 மலர்விழி, வி கூ.சந்திரசேகர்.
○ 1972 மணியோசை, காலாண்டு இதழ், மணிமன்ற வெளியிடு. பொறுப்பாளர்: மைதீ. சுல்தான்.
○ 1972 ஆசிரியர் ஒளி. கோலாலம்பூர், தமிழாசிரியர் சங்கத் திங்களிதழ். ஆசிரியர் கா. கலியபெருமாள்.
○ 1972 உதயம், கோலாலம்பூர், மலேசியத் தகவல் இலாகாவின் வெளியிடு. முதல் 4 ஆண்டு காலம் பொன்முகம் ஆசிரியர்; 1976ல் எம்.துரைராஜ் பொறுப்பேற்றார். உதயம் தொடர்ந்து வருகிறது.
○ 1973 உரிமைக் குரல், ஈப்போ.
○ ,, ஒளி இதயம், கோலாலம்பூர்.
○ 1974 சமநீதி, சிறம்பான் நகரிலிருந்து இத்திங்களிதழ். எழுச்சி மிக்க கட்டுரைகளால் அரசியல் விழிப்புணர்வு ஊட்டினார் கி.ராமன்
○ 1974 எழுத்தாளர், கோலாலம்பூர்,
○ ,, இலக்கிய வட்டம், ,,
○ ,, கனகம், பெட்டாலிங் ஜெயா.
○ 1976 ராக்கெட், ஜனநாயக செயல்கட்சியின் ஏடு. ஆ-ர்:ராமன்
○ 1976 பருவம், செப்டம்பர் முதல் வெளியான தரமான இலக்கிய திங்களிதழ். ஆசிரியர்: ந.தியாகராசன்.



படிப்பகம்

www.padippakam.com

○ 1977 புதிய சமுதாயம், மார்ச் 27 ல் திங்களிருமுறை ஏடாக தொடங்கப்பட்ட தரமான இலக்கியஏடு, ஆர். முருகு.சுப்பிரமணியம்

●○● தொடங்கிய ஆண்டு தெரியாத இதழ்கள்:—

● தமிழ் ஞாயிறு. ஆசிரியர். பரதன், தமிழ்மொழி. இன, முன்னேற்றத்துக்கான கருத்துக்களடங்கிய இதழ்.

● மனோகரன், இலக்கிய இதழ். ஆசிரியர்: ச. வெ. சண்முகம், துணை ஆசிரியர், சிங்கை.

● திரையொளி, சிங்கை, சினிமா கலை இலக்கியத் திங்களிதழ். ஆசிரியர்: எஸ். அண்ணல்.

● மக்கள் தொண்டன், பினாங்கில் சிலகாலம் நடந்த கையெழுத்து இதழ். ஆசிரியர். சித. இராமசாமி.

● தமிழகம், வார இதழ், கோலாலம்பூர், சி, நரசிம்ம ஐயங்கார்:
● இந்திரா இலக்கியத் திங்களிதழ்.
● தோட்டி. மாதஇதழ்.
● தமிழோசை, ஆசிரியர், சோ. ஐ. துரை.
● இந்தியன் மூவி நியூஸ். சிங்கப்பூர். பலஆண்டுகள் நடந்தது.
● பேனாமுனை, மாத இதழ். எம்.கே. பக்ருதீன், 6ஆண்டுகள்.

● போராட்டம், தேசிய தொழிற்சங்க காங்கிரஸின் திங்களிதழ். இதழின் ஆசிரியர் : ப.கேசவன்.

● புல்லட்டின், மாதஇதழ், ஆசிரியர். வை. திருநாவுக்கரசு.
● கண்ணகி, திங்களிதழ், சிங்கப்பூர். ஆ-ர். வெ. இளங்கோ.
● கேசரி, திங்களிதழ், துணை ஆசிரியர்: டி.வி. இராகவன்.
● உதயசூரியன், கிழமை இருமுறை ஏடு. இது பிறகு நாளிதழ் ஆனது. இதன் ஆசிரியர் கிருஷ்ணதாசன். இவர் நாகரிகம் இதழின் இணையாசிரியராகவும் இருந்துள்ளார்.

※ தகவல் இலாகா வெளியிடுகளான ஜனோபகபரி, வெற்றி, வளர்ச்சி போன்ற இதழ்களும் வந்துள்ளன. இவைகளுக்கு ஆசிரிய-ராக சீ. வி. குப்புசாமி இருந்துள்ளார்.

இவைகள் மட்டுமல்லாது தற்பொழுது.........

- வானம்பாடி, வாரஇதழ், சனிக்கிழமை தோறும் வெளியாகிறது.
- தமிழ் ஓசை, நாளிதழ், ஞாயிறு பதிப்புகள் அதிக விற்பனை.
- அறிவு திங்களிதழ்.
- தமிழ்த்தூதன், பத்து நாட்களுக்கு ஒருமுறை.



படிப்பகம்

www.padippakam.com

- அறிவொலி, திங்களிதழ்.
- ஒளிவிளக்கு, மாதஇதழ்.
- வானவில், வாரஇதழ். - சலங்கை, வாரஇதழ்.

/O/ சிற்றிதழ்ச் செய்தி நூலகத்தில் உள்ள இதழ்கள்.

- வானம்பாடி, சிங்கப்பூர், மாதஇதழ். வி.சதானந்தம்.
- கொள்கை முழக்கம், சிங்கப்பூர் தமிழரியக்கத்தின் உரிமை ஏடு.
- அறிவு, சிங்கப்பூர்.
- நம்குரல், கோலாலம்பூர். மலேசிய இந்தோ முஸ்லீம் பேரவை.
- தமிழியம், கிள்ளாங், உலகத் தமிழ்ப்பண்பாட்டு இயக்கத் தலைவராக இருந்து தமிழ்ப்பண்பாட்டுறவுகளை உலகத்தமிழர்களிடையே வளர்க்க, தமிழ் பயில வாய்ப்பற்ற நாடுகளின் தமிழர்களுக்கு உதவ, இயங்கி வரும் இர.ந.வீரப்பன் அவர்களின் தொடர்பு இதழ்.
- மயில், கோலாலம்பூர்,
- சங்கமணி, சிலாங்கூர். சங்கத்தின் பலம் சமுதாயத்தின் பலம் என்ற குறிப்புடன் தொடரும் இவ்விதழ் அடுத்த ஆண்டு 50ஆவது ஆண்டுவிழாவைக் கொண்டாடவிருக்கிறது.
- இதயம் மாத இதழ், கோலாலம்பூர், ஆசிரியர்: எம்.துரைராஜ்.
- கூட்டுறவு, கோலாலம்பூர்.
- பயனீட்டாளர் குரல். பினாங்கு பயனீட்டாளர் சங்கத்தின் வெளியீடு. ஜனவரி 1989 ல் தனது முதல் இதழைத் தொடங்கி, தொடர்ந்து விழிப்புணர்வு ஏற்படுத்தி வருகிறது. எளிய,ஈர்க்கும் படியான படங்களுடன், நுகர்வோர் விழிப்புணர்வு ஏற்படுத்துவது இதன் சிறப்பு. நூல்கள், சிறுவெளியீடுகள், சுவரொட்டி மூலமும் சமுதாய மேம்பாட்டிற்கு உதவுவது இதன் தனிச்சிறப்பு. 2, 3 ஆம் ஆண்டின் முழுத்தொகுப்பையும் இவ்விதழ் அனுப்பியுள்ளது.



பினாங்கு பயனீட்டாளர்
சங்கத் தலைவர்
எஸ். எம். முஹம்மது இத்திரிஸ்



படிப்பகம்

www.padippakam.com

[●] தமிழியம், உலகத்தமிழர் குரல், இதழ்களும் உள்ளன.

(○) 1923 ல் தொடங்கப்பட்ட ' தமிழ் நேசன் ' நாளேடும், 1963 ல் தொடங்கப்பட்ட ' தமிழ் மலர் ' நாளேடும், (தற்பொழுது இதன் பெயர் தினமணி) தொடர்ந்து வந்து கொண்டிருக்கின்றன.

[✽] டாக்டர் இராம.சுப்பையா 'தமிழ் மலேசியானா' என்ற நூலில் சிங்கப்பூர், மலேசியா ஆகிய நாடுகளில் வெளிவந்த, நாள், கிழமை, திங்கள் வெளியீடுகள் பற்றியும், கதை, கவிதை, கட்டுரை, நாவல், போன்ற தனி நூல்கள் பற்றியும் தொகுத்தளித்துள்ளார். [✽]

இக்கட்டுரையில் என்னால் முடிந்தவரை 'மலேசிய இதழ்களின்' செய்திகளைத் திரட்டித் தொகுத்து, வரிசைப்படுத்தியுள்ளேன். இது ஒரு முடிந்த முடிவு அல்ல; தொடக்கம் மட்டுமே.

இதழின் பெயர், ஆசிரியர் பெயர்/ இதழ் முகவரி/ இதழ் நடந்த ஆண்டு, மொத்த இதழ்கள்/ இதழின் நோக்கு, போக்கு, தன்மை பற்றிய குறிப்பு — என்று குறைந்தபட்ச அளவிலாவது செய்திகளை தருவதுதான் சிறப்பாக அமையும். இருந்தாலும் முதற்கட்டமாக இதனை வரிசைப் படுத்தியுள்ளேன். இது தொடர, இதில் விடுபட்ட குறிப்புகள் இருப்பின் அனுப்பி உதவவும்.

ஏகப்பட்ட பிரச்சனைகளுக்கிடையில், இதழ் தொடங்கி நடத்தி மொழிக்கும், இனத்திற்கும் பிரதிபலன் கருதாது பாடுபட்டவர்கள்/ பாடுபடுபவர்கள் அடையாளம் காட்டப்படுவது அவசியமல்லவா?

இதழ்கள் பற்றிய செய்திகளைத் திரட்டுவது, சேகரிப்பது, பாது காப்பது மொழிவளர்ச்சி வரலாற்றுக்கான அடிப்படையும், ஆதாரமு -மானதாகும். எனவே இதழ்களின் தகவல்களைத் திரட்டுவோமாக.

— *பொள்ளாச்சி நசன்* —

கட்டுரைக்கு உதவிய நூல்கள்.


- மலேசியத் தமிழ் இலக்கிய வரலாறு — மா. இராமையா.
- கிழக்காசிய நாடுகளில் தமிழ் மணக்கிறது — சோலை இருசன்.
- மலேசியத் தமிழ் புரவலர்கள் — சோலை இருசன்.
- தமிழ் இதழியல் வரலாறு — மா. சு. சம்பந்தன்.
- தமிழ் இதழியல் சுவடுகள் — மா. சு. சம்பந்தன்.
- தமிழ் இதழியல் களஞ்சியம் — மா. சு. சம்பந்தன்.
- 19 ஆம் நூற்றாண்டுத் தமிழ் இதழ்கள் — அ. மா. சாமி.
- தமிழ் இதழ்கள் தோற்றம் வளர்ச்சி — அ. ம. சாமி.
- பர்மாவில் பெரியார் — நாரா. நாச்சியப்பன்.
- இதழியல் வளர்ச்சியும் மொழிபெயர்ப்பும் — கு.முத்துராசன்.




படிப்பகம்

www.padippakam.com

**சிற்றிதழ்ச் செய்திக்கு வந்த இதழ்கள்:—**

அக்கினிக்குஞ்சு, அணு, அரசகட்டளை, அரசியல் விஸ்வரூபம், அமெரிக்கச் செய்திமடல், அறிவுவழி, அந்தமான் முரசு, அறிவே துணை, ஆன்மசக்தி, இளைய ரோஜா, இளங்கதிர், இளைய உதயம், இலக்கியக் குடும்பம், இலக்கு, ஈழமுரசு, உங்கள் தூதுவன், உங்கள் கவிதைக்காரன், உன்விழிகள், உங்கள்ஹோமியோ நண்பன்,உங்கள் உடல் நலம், உழைக்கும் மக்கள் தமிழகம், உன்னதம், ஊற்று, ஏழை தாசன், கவிதாசரண், கருத்து, கணையாழி, கவிதை உறவு, கலைச் சுரங்கம், கலைக்காவிரி, காலச்சுவடு, காலக்குறி, கேப்பியார், கேர -ளத் தமிழ், சமாதான வழி, சலங்கை, சதுக்கப்பூதம், சமாதானபுறா சங்கொலி, சதங்கை, சர்வதேசத் தமிழர், சிந்தனையாளன், சிறை, சீர்வரிசை, சுவடு, சுந்தர சுகன், சுப்பிரமணிய சிவா, சுவடுகள், சென்ற வாரம், சேனாதிபதி, சோலைக்குயில்,சைவசிந்தனை,தமிழ்ச் சான்றோர் பேரவை, தமிழர் முழக்கம், தமிழ் அருவி, தமிழ்ப்பாவை, தமிழ் முரசு, தமிழ் முனிவன், தமிழினமே எழுக, தாராமதி, தாழம்பூ, தாமரை, திருப்பூர் செய்தி, திரட்டு, தீன்தமிழ், தீவட்டி, தீப்பொறி, தூதுவாகினி,தூறல், தெளிதமிழ், தேனமுதம், தேசியவலிமை,பரதன் பப்ளிசிட்டி, பாணன், பாரதி முரசு, பாரதி, பாட்டாளி சிந்தனை, புறப்பாடு, புரட்சித் தமிழர், புதிய குரல், பூங்குயில், பூக்கூடை, பெரியார் இயக்கம், பொற்கிரி, பொதுமறை, வள்ளியூர் டைம்ஸ், வளரும் தமிழ்உலகம், வாரமுரசு, விழுது, விடியல், வீணை, வெல்லும் தூயதமிழ், நம்மைச் சுற்றி, நர்கிஸ், நமது அலை, நமது பூமி, நதி, நவீன விருட்சம், நாடக வெளி, நிகழ், நிலா, நீலகிரி நியூஸ், நெசவு, மள்ளர் மலர், மனித உரிமை முரசு, மக்கள் தளம், மக்கள் மன்றம், மருத்துவ அறிவியல் மலர், மாற்றம், மீண்டும் கவிக்கொண்டல், முகம், முதல் முரசு, மேலும், மைசூர் முரசு, ஜவஹர் யுகம்.

சிற்றிதழ்ச் செய்தி நூலகத்தில் இன்று வரை [3-9-95] சேர்ந்துள்ள இதழ்களின் எண்ணிக்கை: 1930 வகையான இதழ்கள்.

---

தமிழகத்தில் வெளியாகும் / வெளியான கிருத்துவ இதழ்களைச் சிற்றிதழ்ச் செய்தி வரிசைப்படுத்த விரும்புகிறது. ஆர்வலர்கள், இதழாளர்கள் ஒத்துழைக்குமாறு அன்போடு வேண்டுகிறேன்—நசன்

---



படிப்பகம்

www.padippakam.com




# சிற்றிதழ்கள் செய்ததும்: செய்யத் தவறியதும்.

## தொடர் எண் : 5

— திரு. வல்லிக்கண்ணன். —

இலக்கியப் பத்திரிகை என்றால் அது சிறுகதை, கவிதை, இலக்கியம் சம்பந்தமான ஒன்றிரு கட்டுரைகளை மட்டுமே கொண்டிருக்க வேண்டும் என்கிற நினைப்பும், நடப்பும் இடைக்காலத்தில் தலைதூக்கியவை ஆகும்.

ஆரம்ப கட்டத்தில், சிற்றிதழ்கள் பாரதி வழியையே முற்றிலும் மேற்கொண்டிருந்தன என்று சொல்லலாம். மகாகவி பாரதியார் மொழி வளர்ச்சிக்காக கவிதை, கதைகள் எழுதியதோடு நாட்டுப் பற்று, சமூகசிந்தனை, தனிமனித உயர்வு, பண்பாட்டுப் பாதுகாப்பு வாழ்க்கைத் தர மேம்பாடு முதலியவற்றை வலியுறுத்தவும் தனது எழுத்தாற்றலைப் பயன்படுத்தினார். அவ்வகையில் சிந்தனை ஒளி நிறைந்த கட்டுரைகள் எழுதுவதில் அவர் ஆர்வம் கொண்டிருந்தார்.

அவருக்குப் பின்வந்த எழுத்தாளர்கள், இலட்சிய நோக்குடன், பத்திரிகை நடத்த முனைந்தபோது, பாரதியின் கொள்கைகளைக் கடைபிடித்தார்கள். 1930 களில் தோன்றி வளர்ந்த சிற்றிதழ்கள் இதை நன்கு உணர்த்தின. சுதந்திரச்,சங்கு, காந்தி, மணிக்கொடி ஜெயபாரதி போன்றவை நினைவுகூரத் தக்கவைகள்.

தேச விடுதலைப் போராட்ட காலத்தில், 1930-31ல் சுதந்திரச் சங்கு தீவிரப் பங்கு ஆற்றியது, விறுவிறுப்பும் வேகமும் நிறைந்த கட்டுரைகளையும், ரசமான சிறுகதைகளையும், குத்தும் கிண்டல்



படிப்பகம்

www.padippakam.com

மயமான கார்ட்டூன்களையும் சங்கு வெளியிட்டு வந்தது. அதனால் அன்றைய பிரிட்டிஷ் ஆட்சியின் கோபத்துக்கும், அடக்குமுறைக்கும் அது இலக்காக நேர்ந்தது.

பின்னர், 1932 ல் சங்கு மீண்டும் தோன்றியது. முன்பு சங்கு சுப்ரமணியன், சங்கு கணேசன் பத்திரிகையை வளர்த்தார்கள். அதன் புதுமலர்ச்சிக்கு வனப்பு சேர்ப்பதில், தி.ஜ.ர என்று சுருக்கப் பெயரால், பிற்காலத்தில் தெரியவந்த தி.ஜ. ரங்கநாதனும் சேர்ந்து இருந்தார். தமிழ்த்தொண்டில் இதழ் உற்சாகத்துடன் ஈடுபட்டது.

சமூகப் பிரச்சனைகள் சம்பந்தமான கட்டுரைகள், சமுதாய நோக்குடன் எழுதப்பட்ட சிறுகதைகள், முன்னேற்றத்துக்கான சிந்தனைகள் அதில் இடம் பெற்றன. தமிழ்மொழி வளர்வதற்கான யோசனைகள், நல்லமுறையில் எழுதுவதற்கு இலக்கிய வழிகாட்டும் நல்லுரைகள், இலக்கிய வளர்ச்சிக்குரிய எண்ணங்களை 'சங்கு' வின் தலையங்கப் பகுதி வலியுறுத்தியது. எழுத்துக்கலையில் வளர்ச்சி பெற ஆசைப் பட்டவர்களுக்கு அவை ஊக்கமளிக்கும் நல்லுரை -களாக அமைந்திருந்தன என்றே சொல்ல வேண்டும்,

அரசியல் வார இதழாக ஆரம்பத்தில் நடத்தப்பட்டு வந்த மணிக்கொடி — கூட புதிய சிந்தனைகளும், எழுத்தில் புதுப் புது சோதனைகளும் தோன்றி வளர்வதற்குத் தூண்டுதலாக இருந்தது. தமிழுக்குப் புதுமையான நடைச் சித்திரம் என்ற படைப்பு வகையை வ.ரா., அதில்தான் தொடர்ந்து எழுதினார்.

'மணிக்கொடி' மாதம் இருமுறை வெளிவரும் சிறுகதைப் பத்திரிகையாக மாற்றப்பட்ட பிறகு, அதனால் விளைந்த சாதனைகள் இலக்கிய வரலாற்றில் முக்கிய இடம் பெற்றுவிட்டன. தமிழ்ச் சிறுகதைகளுக்கு இலக்கியத்தரம் கிடைப்பதற்கும், சிறுகதை ஆழமும் கனமும் விதம்விதமான பொலிவுகளும் பெறுவதற்கும் மணிக்கொடி பெரிதும் உதவியது.

அத்துடன் உலக இலக்கியம், இலக்கியப் படைப்பாளிகள் பற்றி ஓரளவு அறிமுகம் பெறுவதற்கும் அந்நாளைய வாசகர்களுக்கு அது உதவிபுரிந்துள்ளது. புத்தக விமர்சனங்களும், சுவையான இலக்கிய சர்ச்சைகளும் மணிக்கொடியில் வெளிவந்தன.

பிற்காலத்தில் பத்திரிகை தொடங்க எண்ணியவர்கள் 'மணிக்கொடி போல் பத்திரிகை நடத்த வேண்டும்' என்று ஆசைப்படுகிற அளவுக்கு அதன் தாக்கம் இருந்தது. 1940 — களில் வெளிவந்த கலாமோகினி, கிராம ஊழியன், சந்திரோதயம், தேனீ போன்ற இதழ்கள் மணிக்கொடியின் பாதிப்பைப் பெற்றிருந்தன.



படிப்பகம்

www.padippakam.com

சுயமான சிறுகதைப் படைப்புகள், கவிதைகள், ஓரங்கநாடகங்கள், மொழிபெயர்ப்புகள், புத்தக விமர்சனம், ஆழ்ந்த சிந்தனைகளை வெளிப்படுத்தும் கட்டுரைகள், உலக இலக்கியங்களை அறிமுகம் செய்தல் முதலியவற்றில் சிற்றிதழ்கள் அக்கறை காட்டி வந்திருக்கின்றன. நாடகம், இதரகலைகள் விஷயத்திலும் சிறிதளவு பார்வையை மணிக்கொடிக்குப் பின்வந்த இதழ்கள் செலுத்தியுள்ளன

நாட்டில் ஏற்பட்டிருந்த அரசியல் விழிப்பும், புதியபுதிய விஷயங்களைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற வாசகர் அவாவும், விசாலப் பார்வையோடு நாட்டை, உலகத்தை, மக்களை, வாழ்க்கையை, கவனித்துத் தாம் உணர்ந்தவற்றை எழுத்துப்பதிவு செய்ய வேண்டும் எனும் எழுத்தாளர் ஈடுபாடும் சிறுபத்திரிகைகளின் வளர்ச்சிக்கு வகைசெய்து வந்திருக்கின்றன.

இவ்வித எழுத்தாளர்களின் ஒத்துழைப்பும், பத்திரிகை ஆசிரியரின் நேர்மையும் துணிச்சலும், உண்மை மீது கொண்ட பற்றும், புதுமை நாட்டமும் ஒரு பத்திரிகைக்கு தனித்தன்மை சேர்க்கின்றன. 1940 களில் பிரசுரம் பெற்ற இதழ்களில் இதனைக் காணலாம்.

( வளரும் )

---

●● மக்களுக்கான சினிமா ●● விலை : ரூ.60/—

தாமரைச் செல்வி பதிப்பகம், 31/48 இராணி அண்ணா நகர், சென்னை. இந்நூலில் பெர்ணான்டோ சொலானாஸ், ஆக்டோவியோ கெட்டினோ[அர்ஜண்டைனா]/ கிளாபர் ரோச்சா[பிரேசில்] ஜார்ஜ் சான்ஜினேஸ்[பொலிவியா]/ மிகுயெல் லிட்டின்[சிலி]/ ஜூலியோ கார்ஸியா எஸ்பினோஸா[கியூபா]/ ஜோரிஸ் இவான்ஸ் [நெதர்லாந்து]/ இல்மஸ் குனே [துருக்கி]/ ஆனந்த பட்டவர்த்தன் [இந்தியா] இவர்கள் எடுத்த படங்களையும், மக்களுக்கான சினிமா பற்றிய கருத்தாக்கங்களையும் தமிழில் தந்திருப்பவர்கள் — நெடுஞ்செழியன், கோச்சடை, அமரந்தா, தி.சு.சதாசிவம், சா.தேவதாஸ், சேந்தன், அ.ஐ. கான், சுதா குமாரசாமி, மதன்மோகன்.........

---

நட்பு இதழின் புதிய முகவரி:—

1. சுந்தர சுகன், அம்மா வீடு, சி-46- இரண்டாம் தெரு, நகராட்சி குடியிருப்பு, தஞ்சாவூர். 613 007.
2. இலக்கு, காலாண்டிதழ், 2/158 மூவரசம்பட்டு மெயின் ரோடு மடிப்பாக்கம், சென்னை - 91.



படிப்பகம்

www.padippakam.com

சிற்றிதழ்ச் செய்தி நூலக கம்ப்யூட்டர்

கனடாவிலிருக்கும் ஸ்ரீனிவாசன் அவர்கள் உருவாக்கிய திரு/ஆதமி தமிழ் எழுத்து மென்தகட்டினை க.பூரணசந்திரன் அனுப்பிவைத்தும் கூட அதை இயக்க முடியாது இருந்தேன். பொள்ளாச்சி கம்ப்யூட்டர் கேந்திராவின் நண்பர்களான டி.கண்ணன், சி.கே.ரமேஷ் மற்றும் எஸ். சிவானந்தம் உதவியால் கம்ப்யூட்டருக்குப் புதிய இணைப்பு பொருத்தப் பட்டு, ஆதமியைக்காண முடிந்தது. திரு. ஸ்ரீனிவாசன் வணங்கப்பட வேண்டியவர். கோபால் மொழியில் தமிழ்/ஆங்கில 10 வகையான, 50க்கு மேற்பட்ட்டவடிவுடைய எழுத்துக்களை அந்த்ச் சின்னத்தகட்டுக்குள் அடக்கிவைத்தது சாதனை இல்லையா?

காவீஸ்வரி எலக்ட்ரானிக்ஸ் க.வெள்ளியங்கிரியைச் சந்தித்தேன் மைக்ரோ ஃபிலிமிற்கு பதிலாக வீடியோலென்ஸ், கம்ப்யூட்டர்,பேக்ஸ் வழி பதிவு செய்து, திரும்பப் பெறாலம் என்றார் அவர்.

---

❋ எழுத்தாளர் கோ. ராஜாராமின் முயற்சியில் 'விளக்கு' என்ற அமெரிக்கத் தமிழர்கள் நிறுவனம் தமிழ்ப் படைப்பிலக்கியத்தில் சிறப்பான சாதனை புரிந்தவர்களுக்கு ஆண்டு தோறும் ரூ 25,000 பரிசளித்து கௌரவிக்க முன்வந்துள்ளது. புதுமைப்பித்தன் பெயரில் அமைக்கப்பட்டுள்ள இந்தப் பரிசுக்கு உரியவராக இந்த வருடம் சி.சு.செல்லப்பா தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார். பரிசுகளுடன் உடன்படாத அவர் விருப்பத்துக் கேற்ப பரிசுக்குப் பதிலாக அவரது பிரசுரமாகாத புத்தகம் ஒன்றை வெளியிட விளக்கு நிறுவனம் முன் வந்துள்ளது. அதன்படி 'என் சிறுகதை பாணி' என்ற 300 பக்கங்கள் கொண்ட கட்டுரைத் தொகுப்பு வெளிவரவுள்ளது.

நன்றி:— நாடக வெளி, நாடகத்துக்கான இருமாத இதழ், [28]

கல்குதிரை 12, காப்ரியேல் கார்ஸியா மார்க்வெஸ் பால்பிரகாஷ், ரவிச்சந்திரன், வளர்மதி, அப்பணசாமி, அச்சுதன் அடுக்கா, செல்வ-முத்துக்குமார், நடராஜன், கோபி கிருஷ்ணன், எஸ்.ராமகிருஷ்ணன், தேவதாஸ், ஆர்.சிவக்குமார், சி.மோகன், முத்துமோகன், டி.எஸ்.நடராஜன், ரமோலா, எஸ்.சண்முகம், தமிழவன், நாகார்ஜுனன், கோணங்கி படைப்புகளுடன் 400 பக்கங்களுடன் செப்டம்பரில் வெளிவரவுள்ளது.

பாரதியாரின் இந்தியாவிற்கு முன்பும் கருத்துப் படங்கள் வெளிவந்துள்ளன. ஜனவினோதினி 1870-90 வரை துரைத்தனக் கல்விச் சங்கத்தினரால் சென்னையில் வெளியிடப்பட்டு வந்தது. இதில் வந்த கட்டுரைகள் பலவற்றைத் தொகுத்து சா. நமச்சிவாய முதலியார் வெளியிட்டுள்ளார் [மா.சு.சம்பந்தன் கடிதத்திலிருந்து]



படிப்பகம்

www.padippakam.com

★ 28-8-95 திங்கட்கிழமை கணையாழி தனது 31வது ஆண்டுத் தொடக்க விழாவை சென்னையில் கொண்டாடியது.

★ 3-9-95 அன்று கவிதாசரண் இலக்கிய வட்டக் கூட்டமும், பிற்பகலில் கோடு தமிழியலுக்கான பேரவை அறிமுகக் கூட்டமும், சைதாப்பேட்டை, திருவள்ளுவர் குருகுலத்தில் நடைபெறவுள்ளது.

★ புதியகுரல் சார்பில் பெரியார் பிறந்த நாள் விழாவும், புதிய குரல் ஏழாண்டு நிறைவு விழாவும் வரும் செப். 10 ல் நடைபெறவுள்ளது. நிகழ்ச்சி ஏற்பாடு: தமிழினப் பெண்கள் விடுதலை இயக்கம்.

வந்த நூல்கள்:—

○ பேர்லாகர் குவிஸ்ட். பாரபாஸ் நோபல் பரிசு பெற்ற நாவல். ஸ்விடிஸ் நாவலைத் தமிழாக்கியவர் க.நா.சு. வெளியிடுவோர்கள் இலக்கிய இயக்கம். விலை.ரூ.35. ஒரு குற்றவாளிக்குப் பதிலாக யேசுவை சிலுவையில் மரணிக்கச் செய்ததால், தண்டனையிலிருந்து தப்புகிற — அவன் எண்ணவோட்டங்களை நாவலாக்கியுள்ளார்.

○ பனியும் பனையும், மித்ரா வெளியீடு. விலை. ரூ.75. இ.பா., எஸ்.பொ. தொகுத்தது. புலம்பெயர்ந்த 39 படைப்பாளிகளின் படைப்பு அணிவகுப்பு. புலம்பெயர்ந்தோரின் பிரச்சனைகளையும், நடைமுறைச் சூழல்களையும் நம்மால் காணமுடிகிறது.

○ பாரதியின் கருத்துப் படங்கள், நர்மதா பதிப்பகம். விலை ரூ50 பதிப்பாசிரியர். ஆ, இரா. வேங்கடாசலபதி. பாரதியார் நடத்திய இந்தியா இதழில் [1906-1910] பிரசுரமாகிய கார்டூன் படங்களின் தொகுப்பு நூல் அழகிய அச்சில் தரமான தாளில் 210 பக்கங்களில் தந்துள்ளார்கள். ஆங்கில அரசுக்கு எதிராகக் கிளர்ந்து எழுந்த இப் படங்கள் எழுத்தைவிட விஞ்சி நிற்பவைகள். இதழாளர்களிடம் இது கட்டாயம் இருக்க வேண்டிய நூல்.

○ இன்னொரு சுவடு. நாசர், விலை.ரூ.24. தாமரைச்செல்வி பதிப்பகம். பல சிற்றிதழ்களில் பிரசுரமான புதுக்கவிதைகளின் நல்ல தொகுப்பு இது. சமுதாயப் பிரச்சனைகளைச் சிறப்பாக உற்று நோக் -குகிற இக்கவிஞனின் எழுத்தில் முதிர்ச்சி தெரிகிறது ; நூலின் புகைப்படத்தில் இளமை தெரிகிறது.

○ தூரத்து வெளிச்சம். எஸ். குமார். ஹைகூ கவிதைகள். இதில் கவிதைகள் ஒரு நேர்கோட்டு விளக்கம் போலத் தோன்றினாலும், இதனடியில் ஆழமான சிந்தனைகள் பளிச்சிடுகின்றன.



படிப்பகம்

www.padippakam.com

சிற்றிதழ்ச் செய்தி ஆய்வு இதழ் ● தனிச்சுற்றுக்கு ● ஆகஸ்ட் 95
பதிவு பெற்ற இதழ் ●❀● பதிவு எண் : 72584/93/இ1

## கூட்டுக்குள் ஒரு கூடு

● — அ. ஷ். கான் —● நன்றி: காலக்குறி, ரியாத். ஜனவரி 95 ❀

நான் போஸ்னியன்
நான் குரோஷியன்
நான் செர்பியன்
இல்லையில்லை நான் அகதி.
நான் யார் ?
மேகச்சூரியனாய் வந்துபோகும் நினைவுகளுடன்
மனிதம் இழந்து திரியும் சதைக்கூடுகளா?

ஏதாவதொரு அடையாள அட்டை விழுமென
என் கபாலக்கூட்டைத் திறந்து வைத்து
எல்லை வாசலருகே காத்திருந்தேன்.

எனக்கான உணவு
எனக்கான இடம்
எனக்கான உரிமை
எங்கே என்று கேட்டபொழுது
நான் நாடு கடத்தப்பட்டேன்.

குறிகளின் ஆதிக்கமில்லா இப்பிரதேசம்
வந்தேகி சில நாட்கள்தான் ஆகிறது
யாரும் என்னிடம் எதுவும் கேட்கவில்லை
ஆனால்,
என்னை மனிதன் என்றுமட்டும்
ஏற்றுக் கொண்டார்கள்.
எனக்குத் தெரிந்து போயிற்று
அடையாள அட்டைகளால்
மனிதத்தை மீட்க முடியாது என்று,
அதனால்தான் வரும்போதே
கடலுக்குள் வீசியெறிந்துவிட்டேன்.

இப்பொழுது என்னிடம் இருப்பது
தலை,
வாய்,
இரண்டு கைகள்,
இரண்டு கால்கள். முகமா ?
அதைத்தான் கடலுக்குள் வீசியெறிந்துவிட்டேனே
இப்பொழுது என் பெயர் அகதியாம்.

ஆசிரியர்: பொள்ளாச்சி நசன், வெளியிடுபவர்: ஆர். மருதமுத்து.
இதழ் முகவரி: 1.சம்பத்நகர், சூளேஸ்வரன்பட்டி, பொள்ளாச்சி - 6.
அச்சமைப்பு: நசன் அச்சகம், பொள்ளாச்சி6. அ.கு.எண் 642 006

படிப்பகம்